பா.ஜ.க. மாநில தலைவர்

# அண்ணாமலை மீது டி.ஆர்.பாலு அவதூறு வழக்கு!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடர்ந்தார்!

சென்னை, மே 14-

அவதூறு கருத்து தெரிவித்த பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை மீது தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

தி.மு.க. நாடாளுமன்ற குழுத்தலைவரும், திமு.க. பொருளாளருமான டி.ஆர். பாலு குறித்து, தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை அவதூறு கருத்துக்களை தெரிவித்திருந்தார். இதுகுறித்து டி.ஆர்.பாலு சார்பில் அனுப்பப்பட்ட நோட்டீசுக்கு அண்ணாமலை பதில் அளிக்கவில்லை. இதையடுத்து சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் அண்ணாமலை மீது டி.ஆர்.பாலு எம்.பி. அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார். சைதாப்பேட்டை 17வது நீதித்துறை நடுவர் அனிதா ஆனந்திடம், அவதூறு வழக்கு தொடர்பான மனுவை தாக்கல் செய்தார். தன் மீது அடிப்படை ஆதாரம் இல்லாமல் அவதூறான கருத்துகளை வெளியிட்டுள்ளதாகவும், அண்ணாமலை தெரிவித்த கருத்துகள் பொய்யானது என்றும் அந்த மனுவில் டி.ஆர்.பாலு குறிப்பிட்டு ள்ளார். இந்த வழக்கு தொடர்பாக நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, டி.ஆர். பாலு தொடர்ந்த அவதூறு வழக்கில் அண்ணாமலை சிறைக்குச் செல்வது உறுதி என்றார்.

**ஆர்.எஸ்.பாரதி பேட்டி!**

பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மீது அவதூறு வழக்கு தொடர்ந்த பின்னர் இதுகுறித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அளித்த பேட்டி வருமாறு:-

கடந்த 16ஆம் தேதி, தமிழ்நாடு மாநில பி.ஜே.பி. தலைவர் அண்ணாமலை, அவதூறாக புளுகு மூட்டைகளை அவிழ்த்து விட்டார். அவர் பேட்டியளித்த அரை மணி நேரத்திற்குள் அவருக்கு தி.மு.க. சார்பில் நாங்கள் பதில் தந்திருக்கிறோம். அந்தக் கூட்டத்திலே அவர் சொன்ன அந்த அவதூறான வாசகங்களை திரும்பப் பெற வேண்டும், மன்னிப்புக் கோர வேண்டும் என்று தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பிலும் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் சார்பிலும் நோட்டீஸ் அனுப்பி ஏறத்தாழ ஒருமாதம் ஆகியும் இதுவரையிலே அவர் பதில் சொல்லவில்லை. அவர் அறிக்கை விடுகிறார், அது வேறு விஷயம.

ஆகவே ஒரு மாத காலம் அவருக்குப் போதுமான அவகாசம் கொடுத்த பிறகும் அவர் மன்னிப்புக் கேட்காததாலும், அவர் சொன்ன வாசகங்களைத் திரும்பப் பெறாத காரணத்தாலும் இரண்டு நாட்களுக்கு முன்பு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் சார்பில் சென்னை செசன்ஸ் கோர்ட்டில் அண்ணாமலை மீது அவதூறு வழக்கு தொடர்ந்திருக்கிறோம்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி பேட்டியளித்தார். இப்பேட்டியின்போது கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. உடனிருந்தார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (SWD/Mech) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது**

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/0967/2023 சிப்பம் 1 முதல் 3 வரை**
பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்க 36 எண்ணிக்கையில் பின்புறம் மூடிய வாகனங்கள் **(Rear Body Closed Vehicle)** ஒரு வருட காலத்திற்கு (312 நாட்கள்) **(26X12)** வாடகை முறையில் பணியமர்த்தும் பணி (சிப்பம் 1க்கு 16 வாகனங்கள் (வடக்கு வட்டாரம்), சிப்பம் - 2க்கு 10 வாகனங்கள் (மத்திய வட்டாரம்), சிப்பம் - 3க்கு 10 வாகனங்கள் (தெற்கு வட்டாரம்).

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **23.05.2023 பிற்பகல் 3.00, மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **24.05.2023 பிற்பகல் 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு : **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2571 / ஒப்பந்தப்புள்ளி / 2023 — **மேற்பார்வை பொறியாளர் (இ/ம.நீ.வ.)**

**சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்**




தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (12.05.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில், பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு அரசியலில் மூக்கை நுழைப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்!

## ஆளுநர் தமிழிசைக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அறிவுறுத்தல்!

புதுச்சேரியில், மே 14 -

புதுச்சேரியில் பார்ட் டைம் ஆளுநராக இருந்து கொண்டு அரசியல் செய்யும் தமிழிசை அவர்கள் தமிழ்நாடு அரசியலில் மூக்கை நுழைப்பதையும், தி.மு.க. மூத்த அமைச்சர் குறித்து விமர்சிப்பதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என புதுச்சேரி மாநில கழக அமைப்பாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

புதுச்சேரி மாநிலத்தின் பார்ட் டைம் ஆளுநர் தமிழிசை அவர்கள் ஆந்திரா, புதுச்சேரியை தொடர்ந்து தமிழகத்தையும் ஆள வேண்டும் என்ற ஆசையால் தான் அடிக்கடி தமிழ்நாடு அரசியலில் மூக்கை நுழைக்கிறார். தமிழ்நாட்டை பற்றி நான் பேசுவதை யாரும் தடுக்க முடியாது என்று சவால் வேறு விடுகிறார்.



10 முறை சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பல்வேறு பொறுப்புக்களை வகித்து பல தலைவர்களுடன் மக்கள் பணியாற்றிய முதுபெரும் திராவிடத் தலைவர், எங்கள் கழகத்தின் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கு ஒரு முறை கூட தேர்தலில் வெற்றி பெற இயலாத தமிழிசை அவர்கள் சவால் விடுவதை ஏற்க முடியாது.

தமிழ்நாடு ஆளுநருக்கு அறிவுரைச் சொல்ல அவருக்கு தகுதியில்லை என்று இவர் வக்காலத்து வாங்குகிறார். தமிழ்நாடு ஆளுநர் அரசியல் சட்டப்படி முறையாக செயல்பட்டால் அவருக்கு ஏன் அமைச்சர் துரைமுருகன் அறிவுரை வழங்கப் போகிறார். மாநில அமைச்சரவையின் ஆலோசனைப் படி தான் ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்றும் ஆளுநருக்கு தனியாக அதிகாரமில்லை என்றும் உச்சநீதிமன்றமே பலமுறை குட்டு வைத்தும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆளுநர்களுக்கு உரைக்கவில்லை என்றால் என்ன செய்வது.

தெலுங்கானாவில் உச்ச நீதிமன்ற கண்டனத்திற்கு பிறகு ஓடோடி கோப்புகளுக்கு கையெழுத்திட்டு எதுவும் என்னிடம் பெண்டிங் இல்லை என்று கதறியதெல்லாம் தமிழிசைக்கு சீக்கிரம் மறந்து போய் விடுகிறது.

இந்து பண்டிகைகளுக்கு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் வாழ்த்து சொல்லவில்லை என்று பழைய பஞ்சாங்கத்தையே மீண்டும் பாடும் தமிழிசை அவர்கள் இந்துக்கள் மீது தமக்கு மட்டுமே அக்கறை இருப்பதாக ரொம்ப தான் புலம்புகிறார். பாவம் அவருக்கு இந்து என்றால் கூட யார் என்று தெரியவில்லை. ஆந்திராவில் சமீபத்தில் ஒரு ஆசிரமத்திற்கு சென்ற தமிழிசை அவர்கள் சன்னியாசியிடம் ஆசி வாங்க நின்றபொழுது ஆடையை இவர் கையில் கொடுக்காமல் தூக்கி எறிந்தாரே அந்த சன்னியாசி அதுதான் தமிழிசையின் இந்துமத தர்மம்.

அரசியல் சட்டப்படி யார் கிருஸ்தவர் இல்லையோ, யார் முஸ்லீம் இல்லையோ, யார் பார்சி இல்லையோ மற்ற அனைவரும் இந்துக்கள். இதை புரிந்து கொள்ளாமல் இந்து என்பதை இவர் கட்சிதான் குத்தகை எடுத்தது போல பேசக்கூடாது.

ஒரு மாநிலத்தின் ஆளுநர் என்பவர் கட்சிக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டும். தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தபொழுது ஆளுநரை ஏன் சந்திக்க வேண்டும் என்கிறார். ஆளுநர் பதவி கூடாது என்பது பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்து இன்று வரை தி.மு.க.-வின் கொள்கையாகும். அதனால் தான் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் பதவியே கூடாது என்று தீர்மானம் இயற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் அரசியல் சட்டம் அதனை அங்கீகரிக்கும் வரை அதற்கான மரியாதையை கொடுப்பது அவசியம். அந்த ஜனநாயக புரிதலோடுதான் அவரை சந்திப்பதும், விவாதிப்பதும். ஆளுநர் பதவி வகிப்பவர் அந்த பதவிக்கான மாண்பை காக்க தவறும்பொழுது ஆளுநர் விமர்சிக்கப்படுகிறார். இதை ஆளுநர் தமிழிசை புரிந்துகொள்ள வேண்டும்.

முந்தைய காங்கிரஸ் - தி.மு.க. ஆட்சியில் ஆளுநராக இருந்த கிரண்பேடி அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை செயல்படாமல் முடக்கினாரே தவிர, நிர்வாகத்தில் அரசியல் செய்ததில்லை. ஆனால் நான் தமிழச்சி என்று சொல்லிக் கொண்டு மதவாத அரசியலை இந்த மண்ணில் விதைத்துக் கொண்டு வருவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

தமிழிசை அவர்கள் தமிழக பா.ஜ.க. தலைவராக இருந்தபொழுது எப்படியும் தாமரையை மலர வைப்பேன் என்று மூச்சுக்கு முப்பது முறை கூறி முடியாமல் போனதை இப்பொழுது நிறைவேற்றலாமா என்று மனக்கணக்குப்போட்டு தமிழ்நாடு அரசியலில் மூக்கை நுழைக்கிறார். இது ஆளுநர் பதவிக்கு அழகல்ல என்பதை தமிழிசை உணர வேண்டும்.

ஜனநாயக ஆட்சி முறையில் உண்மையான நிர்வாக அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் கையில்தான் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் அது ஜனநாயகம். இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும், எங்கள் தலைவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் புதுச்சேரி அரசு மக்களின் விருப்பத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் அறிவிப்பு செய்துள்ள பல திட்டங்கள் முடங்கிக் கிடக்கின்றன. ஒரு நிர்வாகியாக அதை செயல்படுத்துங்கள். 'பெஸ்ட்' புதுச்சேரி என்றீர்களே. அதை உருவாக்க உழையுங்கள். ஒன்றிய அரசில் மாநிலத்திற்கு பெற வேண்டிய நிதியை பெற்று வாருங்கள். இதையெல்லாம் விட்டுவிட்டு மூன்றாவதாக இன்னொரு மாநிலத்தை ஆள ஆசைப்படுவதையும், எங்கள் கழகத்தின் மூத்த அமைச்சர் பற்றி விமர்சனம் செய்வதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு இரா.சிவா தெரிவித்துள்ளார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம்

# புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

நாமக்கல் கிழக்கு மாவட்டம், புதுச்சத்திரம் தெற்குஒன்றியக் கழகச் செயலாளர் துரை.இராமசாமி மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர். ஜெயபிரகாஷ்**, எம்பிஏ., (11ஏ, உடுப்பம் & அஞ்சல், நாமக்கல்வட்டம் & மாவட்டம்.) அவர்கள், புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப் படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள்: 12.5.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.




தோற்றம்: 15.08.1931
மறைவு: 14.05.2020

**தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் இயக்க நிறுவனர், சட்ட மேலவை முன்னாள் உறுப்பினர்**

பாவலர். திரு. **க.மீனாட்சிசுந்தரம்** அவர்களின்

மூன்றாம் ஆண்டு **நினைவு நாள்**

**பாவலர் அவர்களை போற்றுவோம்! வணங்குவோம்!**

**பாவலரின் பாதை மாறாப் பயணத்தில் பயணிப்போம்!**

முனைவர், **மன்றம். நா.சண்முகநாதன்** பொதுச்செயலாளர்

**பெ.இரா.இரவி** மாநிலத் தலைவர் **முருக.செல்வராசன்** மாநிலப் பொருளாளர்

மாநிலத் துணைத் தலைவர்கள்
**வே.விஜயகுமார்**
**அ.நெல்சன்**
**ச.சந்திரசேகரன்**

மாநிலச் செயலாளர்கள்
**ந.கிட்டு**
**செ.ராசேந்திரன்**
**பி.தசரதராமரெட்டி**

மாநிலக் கொள்கை விளக்கச் செயலாளர்கள்
**மு.மோகன்**
**மா.பாலகிருட்டிணன்**

தலைமை நிலையச் செயலாளர்கள்
**சு.ரமேஷ்**
**ப.அறிவுடைநம்பி**

வெளியீட்டுச் செயலாளர்கள்
**செக.மணிவாசகம்**
**மூ.பெரியசாமி**

மாநில சட்டப்பிரிவு செயலாளர்
**உ.சுப்பிரமணியன்**

மாநில அமைப்புச் செயலாளர்
**கோ.சிவக்குமார்**

மாநில இளைஞரணி அமைப்பாளர்
**ந.செரோம் ஆரோக்கியதாசு**

மாநில மகளிரணி அமைப்பாளர்
**ரெ.மதனா**

மாநில மகளிரணி துணை அமைப்பாளர்
**ரோஸ் இந்திரா செலின்**

இலக்கியஅணி அமைப்பாளர்
**கா.தர்மராசு**

இலக்கியஅணி துணை அமைப்பாளர்
**வெ.இராமச்சந்திரன்**

மாநில மூத்தோரணி அமைப்பாளர்
**பொன்.முத்துராமலிங்கம்**

மாநில மூத்தோரணி துணைஅமைப்பாளர்
**ப.செல்வகணபதி**

மாநில தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்
**சு.வேலுமணி**

மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்
**லு.ஆரோக்கியராசு**

மாநிலத் தீர்ப்புக் குழு உறுப்பினர்கள்
**சி.கண்ணன், ச.செந்தில்**
**ப.வெங்கட்டு**

மாநில விதிமுறைக் குழு உறுப்பினர்கள்
**அ.வனத்தையன், ஏ.ஜெயப்பிரகாசு**
**மு.செகநாதன்**

மாநில தணிக்கைக் குழு உறுப்பினர்கள்
**ப.செந்தமிழன்**

மாநிலச் சொத்துப் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள்
**ந.இரவிச்சந்திரன்**
**ஆ.பெத்தபெருமாள், பெ.பழனிச்சாமி**

**தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்**

பதிவு எண்: 17/74 மாநில அமைப்பு அரசு ஏற்பாணை எண்: 991/89